පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් කරන
ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු භාර
අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම
– ස්ථාවර නියෝග අංක 119 (4) ප්‍රකාරව විශේෂ වියදම් ඒකක, අමාත්‍යාංශ,
දෙපාර්තමේන්තු, පළාත් සභා සහ පළාත් පාලන ආයතනවලට අදාළව

பாராளுமன்றத்தின் அரச கணக்கு குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்களிற்கு பொறுப்பான அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல். – விசேட செலவின அலகுகள், அமைச்சுக்கள், திணைக்களங்கள, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கள்

# Submission of observations and action taken by the Minister in charge of the institution with regard to the reports presented to Parliament by the Committee on Public Accounts – Pertaining to the Special Spending Units, Ministries, Departments, Provincial Councils and Local Government Institutions in terms of Standing Order No.119 (4)

පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංක :- **492**
பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் :- 492
**Parliament Series No :- 492**

ආයතනයේ නම :- දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, කිලිනොච්චිය
நிறுவனத்தின் பெயர் :- மாவட்ட செயலகம், கிளிநொச்சி
**Name of the Institution :- District Secretariat, Kilinochchi**



பாராளுமன்றத்தின் அரச கணக்கு குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியல் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்களிற்கு பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் :- 492

நிறுவனத்தின் பெயர் :- மாவட்ட செயலகம், கிளிநொச்சி

| தொ. இல | அரசாங்க கணக்குகள் தொடர்பான செயற்குழுவால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் | தற்போதைய பெறுபேறு |
|---|---|---|
| 1 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில் அனுப்பப்படவில்லை. | உரிய அலுவலர்களிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு தற்போது ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. |
| 2 | உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களிற்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமைக்கான சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | உரிய அலுவலர்களிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு தற்போது ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. |
| 3 | அனைத்து வாகனங்களினதும் உரிமையை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் கைவசம் இல்லை | உரிய ஆவணங்களைப் பெற்று உரிமை மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 4 | வாகனம் ஒவ்வொன்றிற்குமான வாகன சம்பவ பதிவேடுகள் பேணப்பட்டு அவை இற்றைப்படுத்தப்படவில்லை | சீர்செய்யப்பட்டுள்ளது |
| 5 | நி.ஓ 371இன் பிரகாரம் வெளியிடப்பட்ட பணி குறித்த இடைக்கால கட்டுநிதி 10 நாட்களுக்குள் செலுத்தி தீர்க்கப்படவில்லை. | இனி வருங்காலங்களில் இவ்வாறு நடைபெறாத வண்ணம் அலுவலர்களிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. |
| 6 | சேவை இணைப்புச் செய்யப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களைத் தவிர அங்கீகரிக்கப்பட்ட உச்ச வரம்பை மீறும் வகையில் பணியாட்டொகுதியினர் இணைக்கப்பட்டு அல்லது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளார்கள் | சீர்செய்யப்பட்டுள்ளது |
| 7 | மாவட்ட வீடமைப்புக்குழு மாதம் தோறும் கூட்டப்படவில்லை, மாவட்ட விலை நிர்ணயக்குழு கூட்டங்கள் மாதம் தோறும் நடைபெறவில்லை | இக்கலந்துரையாடல்கள் தற்போது வருடத்தில் அரையாண்டிற்கு ஒருமுறை நடைபெற்று வருகின்றது. எனினும் எதிர்வரும் காலங்களில் மாதம் தோறும் நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளபட்டுள்ளது. |
| 8 | பொது நிர்வாக ஏற்பாடுகிளிற்கமைய பொதுவான மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை தயாரிக்கப்பட்டிருந்த மனிதவளத் திட்டம் மூலமாக ஓர் ஊழியருக்காக குறைந்த பட்சம் 12 மணித்தியாலங்கள் மேலதிக பயிற்சி விதிக்கப்படவில்லை | சீர் செய்யப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| 9 | ஒட்டுமொத்த பணியாட்டொகுதியும் உள்ளடங்கத்தக்கதாக செயலாற்றுகை உடன் படிக்கைகள் தயாரிக்கப்பட்டு கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | சீர்செய்யப்பட்டுள்ளது. |
| 10 | மனித வள அபிவிருத்தி திட்டங்களைத் தயாரிக்கவும் கொள்திறன் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டங்களை அமுலாக்குவதற்கும் நிறுவனத்தில் சிரேஸ்ட அலுவலர் நியமிக்கப்படவில்லை | சீர்செய்யப்பட்டுள்ளது |
| 11 | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான / ஒப்புதலளிக்க மறுக்கின்ற /பாதகமான மட்டத்தில் நிலவியது | முனைப்பளிவுள்ள அபிப்பிராயம் கிடைக்கப்பெற்றுள்ளது. |
| 12 | மாவட்ட மற்றும் பிரதேச போதைப் பொருள் தடுப்புக்குழுக் கூட்டங்கள் காலாண்டிற்கொரு முறை கூட நடத்தப்படவில்லை. | மாவட்ட மற்றும் பிரதேச போதைப் பொருள் தடுப்புக்குழுக் கூட்டங்கள் அரையாண்டிற்கொருமுறை நடைபெற்றுள்ளது. தற்போது இவ்விடயம் சீர்செய்யப்பட்டுள்ளது. |
| 13 | 2005ஆம் ஆண்டின் 13ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம், அனர்த்த முகாமைத்துவ கூட்டங்கள் நடத்தப்படவில்லை. | அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம், அனர்த்த முகாமைத்துவ கூட்டங்கள் நடைபெறவில்லை. தற்போது இவ்விடயம் சீர்செய்யப்பட்டுள்ளது. |
| 14 | திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புக்கள் மூலமாக வழங்கப்பட்டிருந்த பயிற்சி வாய்ப்புக்களின் அளவு 50 வீதத்தை பார்க்கிலும் தாழ்ந்த மட்டத்திலேயே நிலவியது. | தற்போது கூடுதலான வீதத்தில் பயிற்சிகள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 15 | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் பரிந்துரைகள் / கட்டளைகள் செயற்படுத்தப்படவில்லை. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 16 | பொதுக்கணக்குக் குழுவின் பரிந்துரைகள் கட்டளைகள் செயற்படுத்தப்படவில்லை | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 17 | அதிகபட்ச சேவைக்காலத்தை நிறைவு செய்த அதிகாரிகளை முறையாக இடமாற்றம் செய்யப்படவில்லை. | சீர்செய்யப்பட்டுள்ளது. |
| 18 | மாவட்ட சுற்றுச்சூழல் குழு இரண்டு மாதங்களிற்கு ஒரு முறையாவது கூட்டப்படவில்லை. | சுற்றுச் சூழல் குழு கூட்டம் அரை ஆண்டிற்கு ஒரு முறை நடை பெற்றுள்ளது. எனினும், இவ்விடயம் இரண்டு மாதங்களிற்கொரு தடவை கூட்டப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

சு.முரளிதரன்,
மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.

சு. முரளிதரன்
அரசாங்க அதிபர்
மாவட்டச் செயலாளர்
கிளிநொச்சி.

சி.விஸ்ணுகுமார்.
பிரதம கணக்காளர்,
மாவட்டச் செயலகம்,
கிளிநொச்சி.

சி. விஷ்ணுகுமார்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
கிளிநொச்சி.

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

S. Alokabandara
Secretary
Ministry of Public Administration,
Provincial Councils and Local Government

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2026 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு (பேராசிரியர்) ஏ. எச். எம். எச். அபயரத்ன அவர்கள் (பா.உ)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Prof. A.H.M.H. Abayarathna
Minister of Public Administration, Provincial
Councils and Local Government
Independence Square, Colombo 07.